Sri M. KARUNANITHI : மாவட்ட தேர்தல் அதிகாரிகள் வேட்பாளர்களிடமிருந்து அவர்கள் தேர்தல் சமயத்தில் வெளியிட்டிருந்த பிரசுரங்கள், துண்டுதாள்கள், சுவரொட்டிகள் முதலியவற்றைக் கேட்பதற்குக் காரணம் என்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எலக்ஷன் கமிஷனரும், மத்திய அரசாங்கமும் தேர்தல் பிரசாரம் எவ்வாறு நடைப்பெற்றது என்று தெரிந்துகொள்ள விரும்பினார்கள். அதற்காக இந்த விவரங்களெல்லாம் சேகரிக்கப்படுகின்றன.

Midday Meals Committee (Report)

* *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to place on the Table of the House a copy of the Report of Midday Meals Committee together with a statement of action taken by the Government on the recommendations of the Committee?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The report of the Committee is under examination and it will be placed on the Table of the House along with the orders of Government on the Report as soon as the examination is completed.

Sri M. KALYANASUNDARAM : இந்தக் கமிட்டி எப்போது தங்களுடைய அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது. அரசாங்கம் அதன்மீது முடிவு இவ்வளவு எடுப்பதற்கு தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்தக் கமிட்டியின் அறிக்கை 4-3-1961-ல் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிறகு டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷனுடைய அபிப்பிராயங்களைக் கோரப்பட்டது. மேலும் பரிசீலனை செய்யப்பட்டது. ஆனால் முன்பு இருந்த அரசாங்கம் தேர்தலுக்குப் பிறகு அதை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்தது. ஆகையால்தான் இதுவரையில் முடிவு செய்யப்படவில்லை. இனி மேல் பரிசீலனை செய்து முடிவு எடுக்கவேண்டும்.

Sri M. KALYANASUNDARAM : தேர்தலுக்கு முன்பே கிட்டத்தட்ட 11 மாதகாலம் அரசாங்கத்திற்கு அவகாசம் இருந்தது. இது ஒரு சாதாரண விஷயம் என்று கருத முடியாது. இந்தக் காலதாமதத்திற்குக் காரணம் கல்வி அதிகாரிக்கும் சர்க்காருக்கும் ஏதோ கருத்து வேற்றுமைதானா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கருத்து வேற்றுமை இருப்பது எனக்குத் தெரியாது. முந்திய அரசாங்கம் ஏன் முடிவு செய்யவில்லை என்பதை விளக்கினேன்.

26th April 1962]

SRI C. CHIRANJEEVULU NAIDU: Will the Government consider the desirability of distributing the CARE materials at the school centres instead of at the taluk range headquarters, as it is causing a lot of hardship to take the CARE materials and also a lot of time is wasted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government have no such proposal.

Letters of the opposition party members (censorship)

* 11 Q.—SRI SAW. GANESAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சுதந்திரக் கட்சியைப் போன்ற எதிர்கட்சி அலுவலங்களுக்கும் எதிர்கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களுக்கும் வரும் கடிதங்களும், அவர்களால் அனுப்பப் பெறும் கடிதங்களும் ரகசிய போலீஸாரால் உடைத்துப் பார்த்துச் சோதனை செய்யும்படி அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா?

(இ) அப்படியானால், காரணமென்ன?

(உ) இல்லையென்றால், அப்படி நடப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) to (c) The Government regret they have to decline to answer the question in the public interest.

SRI SAW. GANESAN: ஏற்கெனவே இதுமாதிரி ஒரு வினா இதே மன்றத்தில் எழுப்பப்பெற்று அதற்கு பதில் சொல்லி இருக்கிறார்களே. அதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: என்ன பதில் என்பது எனக்கு நினைவு இல்லை.

SRI M. KALYANASUNDARAM: எதிர்க்கட்சிகள் எல்லாவற்றையுமே அரசாங்கம் கண்காணித்து வருகிறது. ரகசிய போலீசாரும் பின்தொடர்ந்து வருகிறார்கள், கடிதங்களை பரிசீலனை செய்கிறார்கள் என்பது ரகசியம் அல்ல. அப்படியிருக்கும்போது அதை வெளியிட்டால் என்ன ஆபத்து ஏற்படும் என்று அரசாங்கம் கருதுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் அனுபவம் வாய்ந்தவர். ரகசியமாக ஒரு காரியம் அரசாங்கம் செய்கிறதென்று சொன்னால், அதை வெளியிடுவது முறையல்ல, உசிதமல்ல, புத்திசாலித்தனமும் அல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS